www.padippkem.com



"1957 - 70 ஆம் ஆண்டுகளில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நடைபெற்ற மாபெரும் விவாதம், புரட்சி குறித்த இரண்டு பிரச்சினைகளை மையம் கொண்டிருந்தது. முதலாவதாக, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது பற்றியது. அதாவது தயாராய் இருக்கும் முதலாளித்துவ அரசு எந்திரத்தை நொறுக்கி எறிந்துவிட்டு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதா அல்லது பாராளுமன்ற பாதையைப் பின்பற்றி முதலாளி வர்க்கத்துக்கு சரணடைவதா என்பதாகும். இரண்டாவது, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியபின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி சமுதாயத்தை கம்யூனிச சமுதாயக் கட்டத்திற்கு வளர்த்துச் செல்வதா அல்லது வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தை மீட்டமைப்பதா என்பதாகும்."

# மார்க்சியம் வெல்லும்

'மாபெரும் விவாதம்'

நூல் முன்னுரை



கார்முகில்

www.padippkam.com

**உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!**



**தநாமாலெக**

படிப்பகம்

www.padippkam.com

# "மாபெரும் விவாதம்"

## நூல் முன்னுரை

கார்முகில்

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்

www.padippakam.com

சனவரி 2004

விலை ரூ 15

இது ஆகஸ்ட் 1988 -ல் கேடயம் வெளியீடாக வந்த "மாபெரும் விவாதம்" நூலின் முன்னுரை.

# "மாபெரும் விவாதம்"

## நூல் முன்னுரை

## 1

இத்தொகுப்பில் 1957 நவம்பரில் 12 சோசலிச நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் மாஸ்கோவில் கூடி வெளியிட்ட பிரகடனமும், 1960 நவம்பரில் 81 நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் மாஸ்கோவில் கூடி வெளியிட்ட கூட்டறிக்கையும், 1963 பிப்ரவரி – மார்ச் மாதங்களில் ரசிய–சீன கம்யூனிஸ்ட் கட்சிகளின் மத்திய கமிட்டிகளுக்கு இடையே பரிமாறப்பட்ட மூன்று கடிதங்களும், அதே ஆண்டு ஜூனில் சீனக் கட்சி முன்வைத்த சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் 'பொதுவழி பற்றிய ஓர் ஆலோசனை' என்ற ஆவணமும், அதை விமர்சித்து ரசியக் கட்சி தனது கட்சிஅணிகளுக்கு வெளியிட்ட பகிரங்கக் கடிதமும், அந்த பகிரங்கக் கடிதத்தின் மீது 1963 செப்டம்பரிலிருந்து 1964 நவம்பர் வரை சீனக்கட்சி வெளியிட்ட ஒன்பது விமர்சனக் கட்டுரைகளும், 1970–ல் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியை விமர்சித்து சீனக் கட்சி வெளியிட்ட 'லெனினியமா, சமூக ஏகாதிபத்தியமா?' என்ற ஆவணமும் இடம் பெற்றுள்ளன.

இவற்றில் முதல் இரண்டு ஆவணங்களும், 'சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி பற்றிய ஓர் ஆலோசனை' என்ற சீனக்கட்சியின் ஆவணமும், ரசியக் கட்சியின் பகிரங்கக் கடிதமும், அறுபதாம் ஆண்டுகளின் இறுதிவாக்கில் ஜனசக்தி வெளியீடாக தமிழில் வெளிவந்துள்ளன. இவற்றில் முதல் இரண்டு ஆவணங்களை மட்டும்

படிப்பகம்

www.padippakam.com



என்.சி.பி.எச். நிறுவனம் சமீபத்தில் மறுவெளியீடு செய்துள்ளது. ‘லெனினியமா, சமூக ஏகாதிபத்தியமா?’ என்ற சீனக் கட்சியின் ஆவணம் பீஜிங் வெளியீடாகவும், அதன் மறுபதிப்பு ம.க.இ.க.வின் வெளியீடாகவும் தமிழில் வெளிவந்துள்ளது. மற்ற ஆவணங்கள் அனைத்தும் தமிழில் வெளிவருவது இதுவே முதல்முறையாகும். 1957–70ஆம் ஆண்டுகளில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நடந்த மாபெரும் விவாதத்தை வாசகர்கள் முழுவதுமாக தொகுப்பாகப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே ஏற்கெனவே தமிழில் வெளிவந்த வற்றையும் இணைத்து ஒரு தொகுப்பாக வெளியிடுகிறோம்.

ஏறக்குறைய 20–30 ஆண்டுகளுக்கு முன்பாக சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நடந்த விவாதத்தை தற்போது வெளியிடுவதன் அவசியம் என்ன? இவ்வெளியீடு பற்றிய அறிவிப்பு வந்த உடனேயே சிலர் இக்கேள்வியை எழுப்பியுள்ளனர்.

இத்தொகுப்பு நூல் 20 ஆண்டுகளுக்கு முன்பே வெளியிடப் பட்டிருக்க வேண்டும். 1953–ல் ஸ்டாலின் மறைந்தபின் படிப்படியாக கட்சியிலும், அரசாங்கத்திலும் முழு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட குருச்சேவ் 1956–ல் நடைபெற்ற கட்சியின் 20- வது காங்கிரசில் திருத்தல்வாதத்தை அரங்கேற்றினார். அப்போதே சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் குருச்சேவ் திருத்தல்வாதத்துக்கு எதிரான போராட்டம் தொடங்கியது. தோழர் மாவோவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்த போராட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தினர். அல்பேனியா தொழிலாளர் கட்சியும் இதற்குத் துணை நின்றது. குருச்சேவின் திருத்தல்வாதமும் அதற்கு எதிரான போராட்டமும் சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதிலும் பிரதிபலித்தன.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை முற்றிலும் குருச்சேவ் திருத்தல்வாதத்தை ஆதரித்தது. எனவே அது ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாத நிலைப்பாடுகளை மட்டுமே அணிகளுக் கிடையே எடுத்துச் சென்றது. அதற்கு ஆதரவான ஆவணங்களை மட்டுமே பெரும்பாலும் மறுவெளியீடு செய்தது. குருச்சேவ் திருத்தல்வாதத்துக்கு எதிராக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்ட தத்துவார்த்த ஆவணங்கள் பலவற்றை இருட்டடிப்பு செய்தது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளாகவே திரிபுவாதத்துக்கு எதிராகப் போராடி வெளிவந்ததாகக் கூறிக்கொள்ளும் ‘மார்க்சிஸ்ட்’ கட்சியின் தலைமை



சீனக்கட்சியின் புரட்சிகர நிலைப்பாடுகளை ஆதரிப்பது போல் காட்டிக்கொண்ட போதிலும் உண்மையில் அது சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளையே கொண்டிருந்தது. எனவே அதுவும் சீனக் கட்சியின் ஆவணங்கள் எதையும் மறுவெளியீடு செய்யாமலேயே 1969–ல் தனது சந்தர்ப்பவாத சித்தாந்த நிலைப்பாடுகளை அறிவித்தது.

நக்சல்பாரி விவசாயிகள் பேரெழுச்சியை அடுத்து ‘மார்க்சிஸ்ட்’ கட்சியின் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து நாடெங்கும் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் கட்சியிலிருந்து வெளியேறினர். அவர்கள் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் ஒருங்கிணைப்புக் கமிட்டிகளை அமைத்தனர். மார்க்சிய – லெனினியக் கட்சியையும் உருவாக்கினர். ஆனால் அவர்கள் கட்சியைக் கட்டுவதில் தத்துவார்த்தப் போராட்டத்தின் முக்கியத்துவத்தைப் புறக்கணித்தார்கள். ஆயுதப் போராட்டத்திற்கு அளித்த முதன்மையை தத்துவார்த்தப் போராட்டத்திற்கு அளிக்கத் தவறினார்கள். இதனால் இவர்களும் கூட குருச்சேவ் திரிபுவாதத்துக்கு எதிராக சீனக் கட்சி வெளியிட்ட தத்துவார்த்த ஆவணங்களை அனைத்து மொழிகளிலும் வெளிக்கொண்டு வரவில்லை.

சுருங்கச் சொன்னால் விசயம் இதுதான். திரிபுவாதிகளும், சந்தர்ப்பவாதிகளும் புரட்சிகர தத்துவத்திற்கு அஞ்சி குருச்சேவ் திரிபுவாதத்துக்கு எதிரான சீனக் கட்சியின். ஆவணங்களை வெளியிடாமல் இருட்டடிப்பு செய்தனர். கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் தத்துவார்த்தப் போராட்டத்தின் அவசியத்தைக் குறைத்து மதிப்பிட்டு அதைப் புறக்கணித்ததன் காரணமாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆவணங்களை வெளியிடுவதில் அக்கறை காட்டவில்லை. லின்பியாவோ தொகுத்து வெளியிட்ட மாவோவின் மேற்கோள்கள் என்ற சிறுநூலையும், மக்கள் யுத்தம் நீடூழி வாழ்க என்ற லின்பியாவோவின் கட்டுரையையும், மாவோவின் புகழ்பெற்ற மூன்று கட்டுரைகள் என்ற ஒரு சிறு பிரசுரத்தையும் வெளியிடுவதில் காட்டிய அக்கறையில் ஆயிரத்தில் ஒரு பங்கைக்கூட குருச்சேவ் திரிபுவாதத்தை மயிரிழை அளவுகூட விட்டு வைக்காமல் முறியடிக்கும் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்பது விமர்சனக் கட்டுரைகளை வெளியிடுவதில் காட்டவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



அவர்கள் நவீன திரிபுவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் மார்க்சிய–லெனினிய–மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடிப்பதாக பிரகடனப்படுத்தினார்கள். ஆனால் தத்துவார்த்தப் போராட்டத்தின் முக்கியத்துவத்தைப் புறக்கணித்தது அவர்கள் மாசேதுங் சிந்தனையை முழுமையாகக் கிரகித்துக் கொள்வதற்குத் தடையாக மாறியது. சீனப்புரட்சி வழியும், கலாச்சாரப் புரட்சி நடவடிக்கைகளுமே மாசேதுங் சிந்தனை என்பதாகப் பரவலாகக் கருதப்பட்டுவிட்டது. இதன் விளைவு டெங்சியாவோ பிங் கும்பல் சீனத்தில் மாசேதுங் சிந்தனைக்கு எதிராகத் தாக்குதல் தொடுத்தபோது தத்துவார்த்த ரீதியில் நிராயுதபாணியாக நின்றார்கள். தமக்குள்ளாகவே சித்தாந்த ஒருமைப்பாடு காண முடியாதவர்களாகிவிட்டார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன் தத்துவார்த்தப் போராட்டத்தைப் புறக்கணித்து கட்சியைக் கட்டவும், புரட்சியை நடத்தவும் முயன்றதன் விளைவு, இன்று இருபது ஆண்டுகளுக்குப் பின்னும் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள்முன் அதே கடமை எதிர்கொண்டிருக்கிறது. வரலாற்றுச் சக்கரம் இருபது ஆண்டுகள் சுழன்று மீண்டும் அதே இடத்தில் ஆனால் புதிய தேவைகளையும் சேர்த்துக்கொண்டு வந்து நிற்கிறது. வரலாறு அவசியமான போராட்டங்களைத் தவிர்த்துவிட்டு முன்னேறிவிட முடியாது என்ற உண்மை மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அறுபதாம் ஆண்டுகளில் குருச்சேவ் அதிகாரத்துக்கு வந்து திரிபுவாதத்தைப் புகுத்தியபோது உலகம் முழுவதிலும் இருந்த முதலாளித்துவவாதிகள் கம்யூனிசம் தோற்றுவிட்டது, மார்க்சியம் தோற்றுவிட்டது என்று கூரை மேல் நின்று மகிழ்ச்சியுடன் கூச்சலிட்டார்கள். அதே நேரத்தில் திரிபுவாதிகள் இதுதான் மார்க்சியவழி என்றும், கம்யூனிசம் என்றும் பிரச்சாரம் செய்தார்கள். குருச்சேவ் திரிபுவாதத்திற்கு எதிராக நடத்திய மாபெரும் விவாதத்தில் மார்க்சியம் வெல்லப்பட முடியாதது, கம்யூனிசத்தின் வெற்றி தடுக்கப்பட முடியாதது என்றும் குருச்சேவின் திரிபுவாதம் முதலாளித்துவ சித்தாந்தமே தவிர மார்க்சியமல்ல என்றும் மாவோ நிரூபித்துக்காட்டினார்.

இன்று ரசியாவில் கோர்பசேவும், சீனத்தில் டெங்சியாவோ பிங்கும் மேற்கொண்டிருக்கும் அதிவேக முதலாளித்துவ மீட்சி சீர்திருத்த நடவடிக்கைகளைப் பார்த்து உலகம் முழுவதிலும் உள்ள முதலாளித்துவவாதிகள் மார்க்சியம் தோற்றுவிட்டது, கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று குருச்சேவ் காலத்தைவிட பெருங் கூச்சலிடுகிறார்கள். அதே போல திரிபுவாதிகள் இதுதான் மார்க்சிய வழி என்றும், கம்யூனிசம் என்றும் உரத்த குரலில் பாட்டாளி வர்க்கத்திடம் பிரச்சாரம் செய்கிறார்கள். இந்த நேரத்தில் குருச்சேவ் திரிபுவாதத்திற்கு எதிராக மட்டுமின்றி லியூ–டெங், கோர்பசேவ் திரிபுவாதத்திற்கு எதிராகவும் போராட்டம் நடத்தப்பட வேண்டும். இந்த வரலாற்றுத் தேவையின் விளைவே கேடயம் வெளியீடாக 'திரிபுவாதத்திற்கு எதிராக'வும் 'மாபெரும் விவாதமும்' வெளியிடப்படுவதாகும்.



# 2

மாபெரும் விவாதம் நடந்த ஆண்டுகள் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் புயல் வீசிய ஆண்டுகளாகும். குருச்சேவின் திரிபு வாதத்துக்கு எதிரான போராட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இந்த புயல் வீசத் தொடங்கியது. இன்றும் அதன் அலைகள் ஓய்ந்து விடவில்லை.

மாவோவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் குருச்சேவின் திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தை நடத்தும்போது மிகுந்த கவனத்துடன் இருந்தார்கள். ரசியா உலகிலேயே முதன்முதலாக சோசலிசப்புரட்சியை நடத்திய நாடு, மாபெரும் லெனினால் தலைமை தாங்கப்பட்ட நாடு, சோசலிசக் கட்டுமானத்தில் மிகப்பெரும் சாதனைகளை லெனின் தலைமையிலும், ஸ்டாலின் தலைமையிலும் சாதித்த நாடு, எனவே ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியும், நாடும் உலகெங்கும் உயர்ந்த மதிப்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவையாய் இருந்தன என்பதையும் அத்தகைய ஒரு நாட்டில் குருச்சேவ் உள்ளிருந்தே அதிகாரத்தைக் கைப்பற்றி திரிபுவாதத்தைப் புகுத்தினார் என்பதையும் அவர்கள் கவனத்தில் கொண்டார்கள்.

மேலும் குருச்சேவ் திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்தியங்களின் தீய நோக்கங்களுக்கு உதவுவதாக அமைந்து

படிப்பகம்

www.padippakam.com



விடக்கூடாது என்பதிலும், ரசியக் கட்சியின் தலைவர்களைத் தவறான பாதையிலிருந்து திருத்தி சரிப்படுத்த உதவுவதாக இருக்க வேண்டும் என்பதிலும் அவர்கள் அக்கறை கொண்டிருந்தார்கள். எனவே தான் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீதான விமர்சனங்களை பகிரங்கமாக வைப்பதையும், பெயர் குறிப்பிட்டு விமர்சிப்பதையும் நீண்ட காலம் தவிர்த்து வந்தனர்.நேரில் சந்திக்கும்போது சுட்டிக்காட்டி விமர்சிப்பது, மார்க்சிய – லெனினியக் கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கும் பொதுவான கட்டுரைகளை வெளியிடுவதன் மூலம் திரிபுவாதத்தை எதிர்ப்பது, பெயர் குறிப்பிடாமல் விமர்சிப்பது, அவசியமான சமரசங்கள் செய்து கொள்வது என்ற அணுகுமுறைகளையே மேற்கொண்டனர்.

ஆனால் தோழர் மாவோவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் மேற்கொண்ட இந்த பொறுப்புமிக்க அணுகுமுறையை ரசிய குருச்சேவ் திரிபுவாதக் கும்பல் தனது தீய, வஞ்சகத்தனமான பிளவு வாத நோக்கங்களுக்கே பயன்படுத்திக் கொண்டது.

1953–ல் ஸ்டாலின் மறைந்தார். 1956–ல் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 20–வது காங்கிரஸ் கூடியது. இந்த மூன்று ஆண்டுகளில் கட்சியிலும், அரசாங்கத்திலும் முழு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட குருச்சேவ்,கட்சியின் 20–வது காங்கிரசில், உலக நிலைமையில் 'புரட்சிகர மாற்றங்கள்' ஏற்பட்டுள்ளன என்ற காரணம் கூறி ஏகாதிபத்தியம், யுத்தம், சமாதானம் பற்றிய லெனினியக் கோட்பாடுகளைத் திரித்துப் புரட்டினார். 'பாராளுமன்றப்பாதை' மூலமாக சோசலிசத்திற்கு அமைதியான முறையில் மாறிச்செல்வது என்ற திரிபுவாதக் கோட்பாட்டை முன்வைத்தார். பல்வேறு சமுதாய அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சகவாழ்வு என்ற சரியான லெனினியக் கோட்பாட்டைத் திரித்து 'மூன்று சமாதானக் கொள்கைகள்' என்ற திரிபுவாதக் கோட்பாட்டை முன்வைத்தார். சமாதான சகவாழ்வை ரசியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் பொதுவழியாக அறிவித்தார். இதன் மூலம் சோசலிச நாடுகளின் பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு, ஒடுக்கப்பட்ட நாடுகளின்,மக்களின் போராட்டங்களுக்கு உதவி என்ற வெளிநாட்டுக் கொள்கையைப் புறக்கணித்தார். இவை எல்லாவற்றையும் சமாதான சகவாழ்வு என்ற கொள்கையின் கீழ் கொண்டுவந்தார். மேலும் ஸ்டாலின் தவறுகளை



விமர்சிப்பது என்ற பெயரில் அவருடைய சாதனைகளைத் தாக்கி இழிவுபடுத்தினார்.

எதிரிகளுக்கு எதிரான ஒற்றுமையைப் போற்றும் பொருட்டு சீனக் கட்சியும் மாவோவும் ரசியக் கட்சியின் 20–வது காங்கிரஸ் மற்றும் குருச்சேவின் தவறுகளை பகிரங்கமாக விமர்சிப்பதைத் தவிர்த்தனர்.

மாவோவும், சீனக் கட்சியின் பிற தலைவர்களும், ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர்களையும், பிரதிநிதிகளையும் நேரில் சந்தித்தபோது ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசின் திரிபுவாத நிலைப்பாடுகளுடன் தமது உடன்பாட்டின்மையைத் தெரிவித்து தவறுகளைச் சுட்டிக்காட்டி விமர்சித்தனர். அமைதி வழியில் மாற்றம் பற்றிய பிரச்சினையில் தமது கருத்துக்களை எழுத்துப் பூர்வமான, விரிவான,விளக்கமான அறிக்கையாக அளித்தனர்.

மேலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 1956 ஏப்ரலில் 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவத்தைப் பற்றி' என்ற கட்டுரையையும், டிசம்பரில் 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவத்தைப் பற்றி மேலும் சில கருத்துக்கள்' என்ற கட்டுரையையும் வெளியிட்டது.இக் கட்டுரைகள் ரசியக் கட்சியின் 20–வது காங்கிரசின் தவறுகளை பெயர் குறிப்பிடாமல் விமர்சித்து மார்க்சிய – லெனினியக் கோட்பாடுகளுக்காகப் போராடின.

1957 நவம்பரில் சோசலிச நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மாநாடு மாஸ்கோவில் நடைபெற்றது. இதில் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த நகல் பிரகடன அறிக்கை முற்றமுழுக்க அதன் 20–வது காங்கிரசின் திரிபுவாதக் கோட்பாடுகளையே கொண்டிருந்தது. தோழர் மாவோ தலைமையில் அக்கூட்டத்தில் கலந்து கொண்ட சீனக் கட்சியின் பிரதிநிதிக் குழுவும் பிற சகோதரக் கட்சிகளும் அவ்வறிக்கையின் திரிபுவாதக் கோட்பாடுகளுக்கு எதிராகப் போராடினர். இதன் விளைவாக ரசியக் கட்சியின் 20–வது காங்கிரஸ் முன்வைத்த ஏகாதிபத்தியம், யுத்தம், சமாதானம் பற்றிய திரிபுவாதக் கருத்துக்கள் களையப்பட்டு பிரகடனம் சரிசெய்யப்பட்டது. சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிசக் கட்டுமானம் பற்றிய பொதுவழி பற்றிய கோட்பாடுகள் சேர்க்கப்பட்டன. பாட்டாளி

படிப்பகம்

www.padippakam.com



வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது புரட்சியின் தொடக்கம்தானே தவிர முடிவல்ல, முதலாளியமா, சோசலிசமா எது வெல்லும் என்ற பிரச்சினை தீர்க்கப்பட நீண்ட காலம் ஆகும் என்பது போன்ற சரியான கருத்துக்களும் சேர்க்கப்பட்டன. மேலும் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு அமைதிவழி யிலல்லாத மாற்றம் பற்றிய கருத்துக்களும் சேர்க்கப்பட்டன. இது குறித்து நகல் அறிக்கையில் எதுவுமே இல்லாதிருந்தது. என்றாலும் ரசியக் கட்சியின் தலைவர்கள் மாநாட்டின் பிரகடனம் 20-வது காங்கிரசுடன் சிறிதாவது தொடர்புடையதாக இருக்கவேண்டும் என்று திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டதன் காரணமாக சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமை கருதி 'அவசியமான சமரசமாக' அறிக்கையில் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாற்றம் பற்றிய திருப்தி யற்ற கருத்துக்கள் இடம் பெறுவதை சீனக் கட்சியின் பிரதிநிதிக் குழு ஏற்றுக்கொண்டது.

எனினும் ரசியக் கட்சியின் தலைவர்கள் 1957-ம் ஆண்டு பிரகடனத்தில் சேர்க்கப்பட்ட புரட்சிகர நிலைப்பாடுகளைப் பின்பற்றுகின்றவர்களாக இல்லை. தொடர்ந்து அவர்களுடைய கட்சியின் 20-வது காங்கிரசின் போர் இல்லாத உலகம், ஏகாதிபத்தியங்களின் நல்லெண்ணம், அமைதி வழி மாற்றம் பற்றிய திரிபுவாதக் கருத்துக்களையே பரப்பி வந்தனர். இதனால் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட குழப்பத்தைக் களைவதற்காக சீனக்கட்சி 'லெனினியம் நீடூழி வாழ்க' என்ற கட்டுரையையும் மற்றும் இரண்டு கட்டுரைகளையும் 1960 ஏப்ரலில் வெளியிட்டது. ரசியக் கட்சியின் தவறான கருத்துக்களை இக்கட்டுரைகள் மறுத்து சரியான கோட்பாடுகளை உயர்த்திப் பிடித்தன. விரிவான நலன் கருதி இக் கட்டுரைகளிலும் ரசியக் கட்சியின் பெயர் குறிப்பிட்டு விமர்சிப்பதை சீனக் கட்சி தவிர்த்தது.

ஆனால் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அணுகுமுறை வேறாக இருந்தது. கட்சிகளுக்கு இடையிலான முரண்பாட்டை அது அரசு மட்டத்திற்கு உயர்த்தியது. 1957-ல் ரசியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் உருவான தேசியப் பாதுகாப்புக்கான தொழில்நுட்ப ஒப்பந்தத்தை 1959-ல் தன்னிச்சையாகக் கிழித்தெறிந்தது. அணு குண்டு தொழில்நுட்ப விபரங்களையும், மாதிரியையும் சீனத்திற்கு



அளிக்க மறுத்தது. 1960 ஜூனில் புகாரெஸ்டில் கூடிய சகோதரக் கட்சிகளின் கூட்டத்தில் சீனக் கட்சியை 'வறட்டுவாதிகள்' 'இடதுசாரி தீவிரவாதிகள்' 'பிளவுவாதிகள்', 'போலிப் புரட்சியாளர்கள்', 'யூகோஸ்லாவியாவை விட மோசமானவர்கள்', 'பைத்தியக்காரர்கள்', 'யுத்த வெறியர்கள்', 'தேசிய வெறியர்கள்', 'டிராட்ஸ்கியவாதிகள்' என்றெல்லாம் அவதூறு பொழியும் கடிதம் ஒன்றை சுற்றுக்கு விட்டது. ரசியாவும் – சீனாவும் இரு நாடுகளின் நட்புறவுக்காக தனித்தனியே பத்திரிக்கைகள் வெளியிடுவது எனத் தீர்மானித்திருந்த திட்டத்தை தன்னிச்சையாக ரத்து செய்தது. மேலும் சீனத்தில் பணியாற்றி வந்த எண்ணற்ற ரசிய தொழில்நுட்ப வல்லுனர்கள் அனைவரையும் தன்னிச்சையாகத் திரும்பப் பெற்றுக்கொண்டதுடன் அது சம்பந்தமான ஒப்பந்தங்கள் அனைத்தையும் ரத்து செய்தது.

1960 நவம்பரில் 81 நாடுகளைச்சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டம் மாஸ்கோவில் நடைபெற்றது. முன்னதாக அக்டோபரில் நவம்பர் கூட்டத்திற்கான நகல் அறிக்கை தயாரிப்பதற்கு 21 நாடுகளின் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கூட்டம் நடத்தப்பட்டது. அக்டோபரில் கூடிய கூட்டத்தில் ரசியா தனது சொந்த திரிபுவாத நகல் அறிக்கை ஒன்றை வைத்தது. சீனக்கட்சியும் மற்ற சகோதரக் கட்சிகளும் ரசியா முன்வைத்த அறிக்கையில் திரிபுவாத நிலைப்பாடுகளுக்கு எதிராகப் போராடியதன் விளைவாக பல முக்கிய கொள்கை மாற்றங்கள் அறிக்கையில் செய்யப்பட்டன.

அக்டோபர், நவம்பர் ஆகிய இரு கூட்டங்களிலும் ரசியக்கட்சி முன்வைத்த ''மூன்று சமாதான'' திரிபுவாதக் கொள்கைகள் நிராகரிக்கப்பட்டன. சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமை கருதி முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச்செல்லும் வடிவம் பற்றிய பகுதி 1957-ம் ஆண்டு அறிக்கையில் உள்ளதைப் போல் மாற்றியமைக்கப்பட்டதை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் – ஆனால் இறுதியான சமரசம் எனக் கூறி – ஏற்றுக்கொண்டது.

ஆனால் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சி 1957-ம் ஆண்டு பிரகடனம், 1960 ஆம் ஆண்டு அறிக்கை ஆகியவற்றில் இணைக்கப்பட்ட புரட்சிகர நிலைப்பாடுகளில் ஊன்றி நிற்கவில்லை. அதன் 20-வது காங்கிரசின் திரிபுவாத நிலைப்பாடுகளிலேயே ஊன்றி நின்றது.

படிப்பகம்

www.padippkam.com



1961–ம் ஆண்டு நடந்த அதன் 22–வது காங்கிரசில் குருச்சேவ் திரிபுவாதிகள் 1957–ம் ஆண்டு பிரகடனம், 1960ஆம் ஆண்டு அறிக்கைகளின் புரட்சிகர நிலைப்பாடுகளை முற்றிலும் புறக் கணித்தனர். 1957–ம் ஆண்டு பிரகடனமும், 1960–ம் ஆண்டு அறிக்கையும் புறக்கணித்த மூன்று 'சமாதான' திரிபுவாதக் கொள்கைகளையும், 20வது காங்கிரசின் அனைத்து திரிபுவாதக் கொள்கைகளையும் அப்படியே உயர்த்திப் பிடித்ததுடன் 'அனைத்து மக்கள் அரசு', 'அனைத்து மக்கள் கட்சி' என்ற திரிபுவாதக் கோட்பாடுகளையும் சேர்த்துக்கொண்டனர்.

22-வது காங்கிரஸ் திட்டம் முதலாளித்துவத்தைப் பாதுகாக்கின்ற, முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டு வருகின்ற திட்டம் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிடம் நேரிலேயே விமர்சித்தனர்.

ஆனால் குருச்சேவ் இவ்விமர்சனங்களுக்கு செவிமடுப்பவராக இல்லை. 'சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் சமீபகாலத்திய முழுமையான லெனினியக் கொள்கை' என்றும், 'நம் காலத்தின் உண்மையான கம்யூனிச அறிக்கை' என்றும், 'கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் தொழிலாளர் கட்சிகளுக்கும்,சோசலிச முகாமைச் சேர்ந்த அனைத்து நாட்டு மக்களுக்குமான 'பொதுத்திட்டம்' என்றும் குருச்சேவ் திரிபுவாதிகள் தமது திரிபுவாதப் பாதையை தொடர்ந்து பிரச்சாரம் செய்தனர். அவர்களுடைய திரிபுவாத வழியை விமர்சிப் பவர்களை எதிரிகளாகக் கருதினர். தொடர்ந்து குருச்சேவின் திரிபுவாதத்தை எதிர்த்து வந்த அல்பேனியாவுடன் எல்லாவித உறவுகளையும் துண்டித்துக் கொண்டனர்.

இந்த நேரத்தில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையைப் பேணவேண்டும் என்ற நோக்கத்துடன் வியட்நாம், இந்தோனேசியா, நியூசிலாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த சகோதரக் கட்சிகள், சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்று முன்வைத்த யோசனையையும், சகோதரக் கட்சிகளின் கூட்டத்தை கூட்டுவதற்கான தயாரிப்புக்காக சீனக்கட்சி 1962 ஏப்ரலில் முன்வைத்த 5 ஆலோசனைகளையும் ரசியக் கட்சி நிராகரித்துவிட்டது.



மேலும் சீனாவுக்கு எதிராக இந்தியா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ரசியா இந்தியாவை ஆதரித்ததுடன் அதற்கு ஆயுத உதவியும் அளித்தது. 1957 பிரகடனம், 1960 அறிக்கை ஆகியவற்றின் முடிவுகளுக்கு மாறாக யூகோஸ்லாவியாவைசோசலிச நாடு எனக் கூறி அதனுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டது. 40–க்கும் மேற்பட்ட சகோதரக் கட்சிகளை சீனாவுக்கு எதிராக அறிக்கை விடும்படி தூண்டிவிட்டதுடன் அவற்றின் காங்கிரஸ் மேடைகளை சீன எதிர்ப்பு பிரச்சார மேடையாகப் பயன்படுத்தியது.

இந்நிலையில் அவற்றுக்கு பகிரங்கமாக பதிலளிக்கும் அவசியம் சீனக் கட்சிக்கு நேர்ந்தது. அப்போது கூட ரசியக் கட்சியைப் பெயர் குறிப்பிட்டு விமர்சனம் செய்வதைத் தவிர்த்தது. 1963 ஜுன் 14-ல் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு எழுதிய பதில் கடிதத்தில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி பற்றிய ஆலோசனையை தோழமையுடன் முன்வைத்தது.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி பற்றிய சீனக் கட்சியின் ஆலோசனையை விமர்சித்து ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தனது கட்சி அணிகளுக்கு ஒரு பகிரங்கக் கடிதத்தை எழுதிவெளியிட்ட பின்பே சீனக் கட்சி ரசியாவின் திருத்தல்வாத நிலைப்பாடுகளை எதிர்த்து பகிரங்கமாக பெயர் குறிப்பிட்டு ஒன்பது விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டது.

இக்கட்டுரைகள் சர்வதேச கம்யூனிச இயக்கத்தைப் பிளவு படுத்திய குருச்சேவ் கும்பலின் வஞ்சகத்தனமான துரோகத்தனத்தை அம்பலப்படுத்துவதுடன் அதன் திரிபுவாதத்தை சகல கோணங்களிலும் தோலுரித்துக் காட்டுகின்றன. ஸ்டாலின் தவறுகள் மீதான விமர்சனங்கள் என்ற பெயரில் ஸ்டாலின் சாதனைகள் மீதும் மார்க்சியக் கோட்பாடுகள் மீதும் குருச்சேவ் கும்பல் தொடுத்த தாக்குதலை முறியடிக்கின்றன.யுத்தம், சமாதானம், ஏகாதிபத்தியம் பற்றிய லெனினியக் கோட்பாடுகளை குருச்சேவ் கும்பல் திரித்துப் புரட்டுவதை அம்பலப்படுத்தி பாதுகாக்கின்றன. யூகோஸ்லாவியாவில் திரிபுவாதி டிட்டோ துரோகக் கும்பலால் முதலாளித்துவம் மீட்டமைக்கப்பட்டிருப்பதை நிறுவுவதுடன் சமாதான சகவாழ்வு பற்றிய லெனினியக் கோட்பாட்டை குருச்சேவ் கும்பல் திரித்து தனது

படிப்பகம்

www.padippkam.com



மேலாதிக்க நோக்கங்களுக்காக மூன்று சமாதானக் கொள்கைகளை முன்வைப்பதை அம்பலப்படுத்துகின்றன. குருச்சேவ் கும்பலின் வர்க்க சாராம்சம் ரசியாவில் உள்ள சலுகை பெற்ற சுரண்டும் கூட்டமே என்பதையும், அதன் திரிபுவாதக் கோட்பாடு முதலாளித்துவ கோட்பாடே என்பதையும் தெளிவுபடுத்துகின்றன. சோசலிசத்தில் வர்க்கங்களும், வர்க்கப் போராட்டமும், இருபாதைகளுக்கு இடையிலான போராட்டமும், முதலாளித்துவ மீட்சிக்கான அபாயமும் நீண்ட காலத்துக்கு நிலவும் என்பதை எடுத்துக்காட்டுவதுடன் குருச்சேவின் அனைத்து மக்களுக்குமான அரசு, அனைத்து மக்களுக்குமான கட்சி என்ற திரிபுவாதக் கோட்பாடுகளை முறியடித்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சிய – லெனினியக் கோட்பாடுகளைப் பாதுகாக்கின்றன. மொத்தத்தில் இந்த ஒன்பது விமர்சனக் கட்டுரைகளும் மார்க்சிய– லெனினியப் பெட்டகத்தில் சேர்க்கப்பட்ட ஒப்பற்ற புதிய செல்வங்களாகும்.

அந்த ஒன்பது கட்டுரைகளில் கூட முதல் எட்டுக் கட்டுரைகள் தோழமைப்பூர்வமாக ரசியக் கட்சியின் திரிபுவாத நிலைப்பாடுகளை கோட்பாட்டு நிலைகளிலிருந்து எதிர்த்து முறியடிப்பதாகவே இருந்தன. ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை திருந்துவதற்கான எந்த அறிகுறியும் இறுதிவரை தென்படாத நிலையிலேயே 9 –வது விமர்சனக் கட்டுரை திரிபுவாதக் குருச்சேவ் கும்பல் என்றும், அது ரசியாவில் சலுகை பெற்ற சுரண்டும் பிரிவின் பிரதிநிதி என்றும், ரசியாவில் அது முதலாளித்துவத்தை மீட்டமைக்கிறது என்றும் நேரடியாக விமர்சனம் செய்தது.

ஒன்பதாவது விமர்சனக் கட்டுரை வெளிவந்த சில மாதங்களிலேயே குருச்சேவ் வீழ்ச்சியடைந்தார். ஒரு ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் பிரஷ்னேவ், கோஷிஜின் கும்பல் கட்சியிலும், அரசாங்கத்திலும் குருச்சேவை விரட்டிவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றியது. குருச்சேவ் வீழ்ந்தவுடன் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி குருச்சேவ் ஏன் வீழ்ந்தார் என்ற கட்டுரை ஒன்றை வெளியிட்டது. குருச்சேவிற்கு பின் அதிகாரத்திற்கு வந்த பிரஷ்னேவ் கும்பல் குருச்சேவின் திரிபுவாதக் கொள்கைகள் எதிலும் மாற்றம் கொண்டுவரவில்லை. குருச்சேவின் திரிபுவாதப் பாதையையே பின்பற்றியது என்பதோடு மேலாதிக்க நோக்கங்களுடன் திட்டமிட்டு



செயல்படத் தொடங்கியது. இந்த நிலையில் 1970–ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ''லெனினியமா, சமூக ஏகாதிபத்தியமா?'' என்ற கட்டுரை ஒன்றை வெளியிட்டு திருத்தல்வாத ரசியா ஒரு சமூக ஏகாதிபத்தியமே என்று பிரகடனப்படுத்தியது.

சுருங்கச் சொன்னால் ரசிய குருச்சேவ் திரிபுவாதத்துக்கு எதிரான மாவோவின் போராட்டம் உலகின் கபடத்தனம் வாய்ந்த ஒரு மாபெரும் வஞ்சகனுக்கு எதிரானதாய் இருந்தது. எனவே அவருடைய அணுகுமுறை மிகவும் கவனமிக்கதாய் இருந்தது. சர்வதேச அரங்கில் ரசிய குருச்சேவ் திருத்தல்வாதத்துக்கு எதிரான போராட்டம் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையைப் பாதிப்பதாக இருந்து விடக்கூடாது என்ற கவலையுடன் கூடியதாக இருந்தது. எனவே அது அவசியமான சமரசங்களைச் செய்துகொள்வதாக இருந்தது.

முற்றிலும் திரிபுவாதப் பாதையைத் தேர்வு செய்துகொண்ட குருச்சேவ் கும்பல் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் முற்றிலும் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுப் போகாமல் இருப்பதற்காக வஞ்சகத்தனமாக 1957 பிரகடனம், 1960 அறிக்கை ஆகியவற்றில் புரட்சிகர நிலைப்பாடுகளை இணைப்பதை ஏற்றுக்கொண்டது. என்றாலும் அது தனது திருத்தல்வாதப் பாதையிலேயே ஊன்றி நின்றது. அதன் 22-வது காங்கிரசிலும் அதன் பின்னரும் தனது திருத்தல்வாதப் பாதையையே நடைமுறைப்படுத்தி உலக கம்யூனிச இயக்கத்தைப் பிளவுபடுத்தியது. உலகம் முழுவதும் முதலாளித்துவ கம்யூனிஸ்ட் கட்சிகளை உருவாக்கியது.

ரசியக் கட்சியின்பால் தனது அணுகுமுறை குறித்து தோழர்கள் விமர்சித்தால் தாம் சுயவிமர்சனம் செய்து கொள்வதாக சீனக்கட்சி தனது விமர்சனக் கட்டுரையொன்றில் கூறியிருக்கிறது. ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த அணுகுமுறை சரியா, தவறா என்பதை நாம் இங்கு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவில்லை. இங்குள்ள பிரச்சினையும் அதுவல்ல. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அணுகுமுறை சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கவலையும், பொறுப்பும் கொண்டதாக இருந்தது; புரட்சிகர மார்க்சியக் கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கும் அக்கறையும் உத்வேகமும் கொண்டதாக இருந்தது. இதற்கு மாறாக ரசியக் கட்சியின் அணுகுமுறை கபடத்தனமாகவும்,

படிப்பகம்

www.padippkam.com



பிளவுவாதமாகவும், துரோகத்தனமாகவும் இருந்தது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

# 3

1957-70ஆம் ஆண்டுகளில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நடைபெற்ற மாபெரும் விவாதம் புரட்சி குறித்த இரண்டு பிரச்சினைகளை மையங் கொண்டிருந்தது. முதலாவதாக, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதைப் பற்றியது. அதாவது தயாராய் இருக்கும் முதலாளித்துவ அரசு எந்திரத்தை நொறுக்கி எறிந்து விட்டு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதா அல்லது பாராளுமன்றப் பாதையைப் பின் பற்றி முதலாளி வர்க்கத்துக்குச் சரணடைவதா என்பதாகும். இரண்டாவது, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி சமுதாயத்தை கம்யூனிச சமுதாயக் கட்டத்திற்கு வளர்த்துச் செல்வதா அல்லது வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தை மீட்டமைப்பதா என்பதாகும்.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளை எதிர்த்து லெனின் போராடியபோது உலகில் சோசலிச நாடு எதுவும் இல்லை. எனவே முதல் பிரச்சினை மட்டுமே அப்போது நிகழ்ச்சி நிரலில் இருந்தது. ஆனால் குருச்சேவ் புரட்டல்வாதத்துக்கு எதிரான போராட்டம் தொடங்கிய போது உலகின் மூன்றில் ஒரு பங்கு மக்கள் சோசலிச நாடுகளில் இருந்தனர். அங்கு முதலாளித்துவ மீட்சிக்கான முயற்சிகள் நடந்து கொண்டிருந்தன. எனவே இயல்பாகவே குருச்சேவ் புரட்டல்வாதத்துக்கு எதிரான போராட்டம் இரண்டு பிரச்சினைகளையும் நிகழ்ச்சி நிரலில் கொண்டிருந்தது.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்த்தனர். உள்நாட்டுப் புரட்சி யுத்தத்தைக் கைவிட்டனர். இதன் மூலம் பாட்டாளி வர்க்கத்தை முதலாளி வர்க்கத்துக்குச் சரணடையச் செய்தனர். 'அதீத ஏகாதிபத்தியம்' என்ற கொள்கையின் மூலமும், 'சோசலிசத்தில் காலனியம் நன்மை பயக்கும்' என்ற கொள்கையின் மூலமும் உலக யுத்தத்தின்போது 'தாயகத்தைப் பாதுகாப்போம்' என்ற முழக்கத்தின் மூலமும் ஏகாதிபத்தியத்தையும் ஏகாதிபத்தியக் கொள்கைகளையும் ஆதரித்தனர். சோசலிசம் பேசிக்கொண்டே புரட்சி யுத்தத்தை எதிர்ப்பவர்களாகவும், ஏகாதிபத்தியத்தையும், ஏகாதிபத்தியக் கொள்கைகளையும் ஆதரிப்பவர்களாகவும் இருந்த இவர்களை சமூக தேசிய வெறியர்கள் என்றும் சமூக ஏகாதிபத்தியவாதிகள் என்றும் லெனின் அடையாளம் காட்டினார்.



இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளைப் போலவே அறுபதாம் ஆண்டுகளில் குருச்சேவ் புரட்டல்வாதிகள் உள்நாட்டுப் புரட்சி யுத்தங்களைக் கைவிடும் கோட்பாடுகளை முன்வைத்தனர். 'முதலாளித்துதப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதன் மூலம் பாராளுமன்றத்தை மக்களின் விருப்பத்திற்கான கருவியாக மாற்றுவது' பாராளுமன்றப் பாதை மூலம் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு 'சமாதானமுறையில் மாறுவது' போன்ற கோட்பாடுகளை முன்வைத்ததன் மூலம் குருச்சேவ் உள்நாட்டுப் புரட்சி யுத்தங்களை எதிர்த்தார்; பாட்டாளி வர்க்கத்தை முதலாளி வர்க்கத்திற்குச் சரணடையச் செய்தார். தனது ஏகாதிபத்திய, மேலாதிக்க நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 'மூன்று சமாதானக் கோட்பாடுகளை' முன்வைத்தார். அதன் மூலம் ஏகாதிபத்தியத்தையும், ஏகாதிபத்தியக் கொள்கைகளையும் ஆதரிக்கும் சமூக ஏகாதிபத்தியவாதியாக இருந்தார்.

குருச்சேவின் இந்த திரிபுவாதக் கொள்கைகளை எதிர்த்து மாவோ போராடினார். முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச் செல்வதற்கு ஒவ்வொரு நாட்டின் பாட்டாளி வர்க்கமும் தமது சொந்த நாட்டில் புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தை நடத்த வேண்டியதன் அவசியத்தை அவர் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தார். உலகமெங்கும் பாட்டாளி வாக்கம் நடத்தும் புரட்சிகர யுத்தங்கள் மூலமாக மட்டுமே ஏகாதிபத்தியங்கள் ஒழிக்கப்பட முடியும், மூன்று சமாதானக் கோட்பாடுகளினால் அல்ல என்பதை எடுத்துரைத்தார்.

சோசலிசம் பற்றிய மார்க்சிய–லெனினியக் கோட்பாடுகளையும் குருச்சேவ் திரித்துப் புரட்டினார். சோசலிசம் என்பது முதலாளியத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையிலான ஒரு காலகட்டம்;

படிப்பகம்

www.padippkam.com



பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கான காலகட்டம்; புரட்சிகர மாற்றத்திற்கான காலகட்டம் என்று மார்க்சும், மடிந்துவரும் முதலாளித்துவத்துக்கும், இளம் பருவத்திலிருக்கும் கம்யூனிசத் திற்கும் இடையிலான போராட்ட காலகட்டம் என்று லெனினும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் குருச்சேவ் ரசியாவில் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் இல்லை என்றும் அரசும், கட்சியும் அனைத்து மக்களுக்குமானதாக மாறிவிட்டதென்றும் புரட்டல்வாதக் கொள்கையை முன்வைத்தார். இதன் மூலம் உள்நாட்டில் சோசலிசத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தை மீட்டமைப்பவராகவும், அதன் பாதுகாவலராகவும் இருந்தார். குருச்சேவின் இந்த திரிபுவாதக் கொள்கைகளையும் எதிர்த்துப் போராடிய மாவோ சோசலிச சமுதாயத்தில் நீண்டகாலத்திற்கு வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும், இருபாதைகளுக்கு இடையிலான போராட்டமும் நீடிக்கும் என்றும், எது வெல்லும் சோசலிசமா முதலாளித்துவமா என்பது நீண்ட காலத்திற்குத் தீர்மானிக்கப்பட முடியாது என்றும், முதலாளித்துவம் மீட்டமைக் கப்படுவதற்கான அபாயம் நீடிக்கும் என்றும் எடுத்துரைத்தார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் புரட்சியைத் தொடர்வது பற்றிய கோட்பாட்டையும் வளர்த்தெடுத்தார்.

## 4

லெனினுக்குப் பின் சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் ஒப்புயர்வற்ற தலைவராகவும் ஆசானாகவும் திகழ்ந்தவர், ரசியாவில் சோசலிசக் கட்டுமானத்தில் நிகரற்ற சாதனைகள் நிகழ்த்தியவர் ஸ்டாலின். அவர் ரசியாவில் உற்பத்தி சாதனங்களில் தனியுடைமையை ஒழித்து கூட்டுறவு மயமாக்கத்தை நிறைவேற்றினார். இதற்கு எதிரான எல்லா முதலாளித்துவப் பாதையாளர்களையும் முறியடித்தார். ஆனால் கூட்டுறவு மயமாக்கத்திற்குப் பின் சமுதாயத்தில் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் இருப்பதைக் காணத்தவறினார். புதிய நிலைமைகளில் வர்க்க ஆய்வு செய்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தை, புரட்சியை வழி நடத்தத் தவறினார். கூட்டுறவு மயாமாக்கத்திறகுப் பின்னும் சோசலிச சமுதாயத்தில் தொடர்ந்து முதலாளித்துவப் பாதைக்கும்,



சோசலிசப் பாதைக்கும் இடையிலான போராட்டம் தொடர்கிறது. முதலாளித்துவ மீட்சிக்கான அபாயம் நிலவுகிறது என்பதைக் காணத் தவறினார். உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும், உற்பத்திப் பெருக்கமும் சமுதாயத்தை தாமே கம்யூனிசத்திற்கு இட்டுச் செல்லும் எனக் கருதினார். இதுவே ஸ்டாலின் செய்த தவறுகளிலேயே மிகப் பெரியதாகும்.

ஸ்டாலின் மறைவுக்குப் பின் அதிகாரத்திற்கு வந்த குருச்சேவ் ரசியக் கட்சியின் 20-22வது காங்கிரசுகளில் திரிபு வாதத்தை அரங்கேற்றினார். சோசலிசத்தில் வர்க்கங்களும், வர்க்கப் போராட்டமும் இருப்பதை மறுத்தார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், பாட்டாளிவர்க்கக் கட்சி ஆகியவற்றுக்குப் பதிலாக அனைத்து மக்கள் அரசு, அனைத்து மக்கள் கட்சி என்ற கருத்தை முன்வைத்தார். இருபத்தைந்து ஆண்டுகளில் உற்பத்தியையும் உற்பத்தி சக்தி களையும் பிரமாண்டமான அளவுக்கு வளர்த்து கம்யூனிச சமுதாயத்தைக் கட்டிவிடப்போவதாகப் பகட்டினார்.

அந்த ஆண்டுகளில் சீனத்திலும் இதே போன்ற திருத்தல் வாதப் போக்குகள் வெளிப்பட்டன. 1956-ல் ரசியக் கட்சியின் 20-வது காங்கிரசுக்குப் பின் சீனத்தில் நடைபெற்ற சீனக்கட்சியின் 8-வது காங்கிரசில் லியூசோஷி சீனத்தில் கூட்டுறவுமயமாக்கம் ஏறக்குறைய நிறைவேற்றப்பட்ட நிலையில் முதலாளிவர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு அடிப்படையில் தீர்ந்து விட்டது என்றும், முன்னேறிய உற்பத்தி உறவுகளுக்கும் பின்தங்கிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடாக இருக்கிறது என்றும் எனவே உற்பத்தி சக்திகளை வளர்ப்பதே தற்போதைய பிரதான பணி என்றும் அறிவித்தார். இதே கோட்பாடுகளே பின்னர் லின்பியாவோவாலும், டெங்சியாவோ பிங்காலும் முன்வைக்கப்பட்டன.

உண்மையில் உற்பத்தி சக்திகள் பற்றிய இவர்களுடைய கோட்பாடு முதலாளித்துவ உறவுகளைப் புகுத்தும் கோட்பாடாகும். உற்பத்தியைப் பெருக்குவதற்காக இவர்கள் பொருளாதார ஊக்கம், லாபத்தோடு இணைந்த உற்பத்தி, உற்பத்தியோடு இணைந்த ஊதியம் போன்ற முதலாளியக் கோட்பாடுகளையே முன் வைக்கிறார்கள். உற்பத்தி பெருக்கத்திற்காகவும், உற்பத்தி சக்திகளின்

படிப்பகம்

www.padippkam.com



வளர்ச்சிக்காகவும் என்ற பெயரில் சோசலிச உற்பத்தி உறவுகளை பின்னுக்குத் தள்ளி முதலாளித்துவ உறவுகளைக் கட்டமைக்கிறார்கள்.

இது மேலும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாக மாறி மேலும் மேலும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை விரிவடையச் செய்யும் அவசியத்தை ஏற்படுத்துகின்றன. இந்த விஷச் சுழல் இறுதியில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை உடைத் தெறிந்து மீண்டும் சோசலிச உறவுகளை நிறுவும் புரட்சியின் அவசியத்தை முன்னிறுத்துகிறது.

ரசியாவிலும், சீனாவிலும் முதலாளித்துவப் பாதையாளர்களான திரிபுவாதிகள் அதிகாரத்திற்கு வந்த பின்னர் தொடர்ந்து ஏற்படும் நெருக்கடிகள் காரணமாக மேலும் மேலும் முதலாளித்துவ உறவுகள் விரிவாக்கப்படுவது இந்த உண்மையைப் புலப்படுத்துவதாகும்.

ஆனால் சோசலிசம் என்பது இத்தகையதலல. இங்கு உற்பத்தி மற்றும் உற்பத்தி சக்திகளின் தங்குதடையற்ற வளர்ச்சிக்காக உற்பத்தி உறவுகள் மேலும் புரட்சிகரமாக மாற்றியமைக்கப்படுகின்றன. உற்பத்திப் பெருக்கத்திற்கும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும் பொருளாதார ஊக்கமும், லாபத்தோடு இணைந்த உற்பத்தியும், உற்பத்தியோடு இணைந்த ஊதியமும் தூண்டுதல் இலக்குகளாக வைக்கப்படுவதில்லை. மாறாக சோசலிச உற்பத்தி உறவுகளும், சோசலிச ஆன்மீக ஊக்கமுமே இலக்குகளாக வைக்கப்படுகின்றன. இதற்காகத் தொடர்ந்து சோசலிசக் கல்வியாலும், கலாச்சாரப் புரட்சியாலும் மக்கள் பயிற்றுவிக்கப் படுகிறார்கள். இந்தப் புரட்சிகர மாற்றம் பெரும்பாலும் அமைதிவழி மாற்றமே எனினும் சில சமயங்களில் 'உற்பத்தி சக்தி' கோட்பாட்டாளர்கள் உள்ளிருந்தே அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு முதலாளித்துவ பாதையில் சமுதாயத்தை வழிநடத்த முனையும்போது சோசலிச சமுதாயத்திற் குள்ளாகவே பாட்டாளி வர்க்கம் மீண்டும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான புரட்சிப் போராட்டமாகவும் இது வெடிக்கும். சீனத்தில் லியூசோஷி தலைமையை தூக்கியெறிவதற்காக நடத்தப்பட்ட கலாச்சாரப் புரட்சி உண்மையில் பாட்டாளிவர்க்கம் மீண்டும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான புரட்சியாகவே இருந்தது என்பது இதற்கு உதாரணமாகும்.



உற்பத்தி சாதனங்களில் தனியுடைமை முறையை ஒழிப்பது; அரசு முதலாளித்துவம் மற்றும் கூட்டுறவு முறை மூலம் கூட்டுடைமை முறைக்கும் அரசுடைமை முறைக்கும், இறுதியாக அரசுடைமை முறைக்கு கொண்டுவருவது; நகர்ப்புறத்திற்கும் கிராமப்புறத்திற்கும் இடையிலான வேறுபாட்டையும், அறிவு உழைப்பிற்கும் உடலுழைப்பிற்கும் இடையிலான வேறுபாட்டையும், விவசாயத்திற்கும் தொழிற்துறைக்கும் இடையிலான வேறு பாட்டையும் களைவது; சோசலிசக் கல்வி, கலாச்சாரப் புரட்சி மூலம் மக்களின் சோசலிச உணர்வை வளர்ப்பது; சோசலிச ஆன்மீக நாகரிகத்தில் பயிற்றுவிப்பது; இவ்வாறு சோசலிசத்தில் உற்பத்தி உறவுகள் மேலும் மேலும் புரட்சிகரமாக மாற்றியமைக்கப்பட்டு கம்யூனிச சமுதாயம் நிறுவப்படும். இது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் முதலாளித்துவ வர்க்கத்துக்கும், முதலாளித்துவப் பாதைக்கும் எதிரான போராட்டமும் இன்றி சாத்தியமற்றதாகும்.

ரசிய, சீன அனுபவங்களையும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அனுபவங்களையும் தொகுத்த மாவோ சோசலிச சமுதாயம் கம்யூனிச சமுதாயமாக மாறுவதற்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவது பற்றியும், அரசியலை ஆணையில் வைப்பது பற்றியும், வர்க்கப் போராட்டத்தை பிரதானக் கண்ணியாகக் கொள்வது பற்றியும் உலகப் பாட்டாளி வர்க்கத்துக்குப் போதித்திருக்கிறார்.

## 5

மாவோவின் மறைவுக்குப்பின் சீனத்தில் டெங்சியாவோ பிங் தலைமையில் முதலாளித்துவப் பாதையாளர்கள் கட்சியிலும் ஆட்சியிலும் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள். ரசியாவில் குருச்சேவின் வாரிசாக பிரஷ்னேவுக்குப்பின் கோர்பசேவ் பதவி யேற்றிருக்கிறார். மாபெரும் லெனினாலும் ஸ்டாலினாலும் தலைமை தாங்கப்பட்ட ரசியாவில் கோர்பசேவும், தோழர் மாவோவால் தலைமை தாங்கப்பட்ட சீனத்தில் டெங்சியாவோ பிங்கும் மிக துரித

படிப்பகம்

www.padippkam.com



வேகத்தில் முதலாளித்துவ உறவுகளை விரிவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

மறுசீரமைப்பு, பகிரங்கப்படுத்துதல், ஜனநாயகப்படுத்துதல் என்றெல்லாம் பெருத்த கூச்சலுடன் கோர்பசேவ் செய்து வருவது அனைத்தும் உற்பத்தியிலும் நிர்வாகத்திலும் முதலாளித்துவ உறவுகளை முழுஅளவுக்கு விரிவுபடுத்துவதாயிருக்கிறது.

நான்கு நவீனமயமாக்கலுக்காக சீனத்தில் டெங்சியாவோ பிங் உற்பத்தியிலும், நிர்வாகத்திலும் முழுவேகத்தில் முதலாளித்துவ உறவுகளைக் கொண்டு வருகிறார்.

இவற்றைப் பார்த்து உலகம் முழுவதும் முதலாளித்துவ வாதிகள் மகிழ்ச்சிக் கூக்குரல் இடுகிறார்கள். குருச்சேவுக்கு அவர்கள் தெரிவித்த வரவேற்பையும் மகிழ்ச்சியையும்விட கோர்பசேவுக்கும், டெங்குக்கும் தெரிவிக்கின்றார்கள். கோர்பசேவ் மாபெரும் புரட்சியை நிகழ்த்தியிருக்கிறார் என்றும், அவர் மாபெரும் 'புரட்சியாளர்' என்றும் அவருடைய முதலாளித்துவ நடவடிக்கைகளை அவர்களுடைய மொழியில் வர்ணிக்கிறார்கள்.

கோர்பசேவின் முதலாளித்துவ சீர்திருத்த வேகம் நமது நாட்டின் 'மார்க்சிஸ்ட்' கட்சியினரையே நிலைகுலையச் செய்திருக்கிறது. ரணதிவே அரைகுறையாகக் கண்டனம் தெரிவிக்கிறார். இ. எம். எஸ். அதை எதிர்ப்பதா ஆதரிப்பதா என்று தெரியாமல் விழிக்கிறார். கட்சியின் உள்ளூர் பத்திரிக்கைகளோ உற்சாகமாக வரவேற்று எழுதுகின்றன. இவ்வாறு நவீன திரிபுவாதிகளையே நிலைதடுமாறச் செய்துவிட்ட கோர்பசேவின் சீர்திருத்தங்களை வி.மி. போன்ற சில முன்னாள் மா–லெ புரட்சியாளர்கள் முற்போக்கானது என்று வர்ணிக்கிறார்கள்.

உண்மையில் கோர்பசேவ், குருச்சேவின் விரிவாக்கம் என்பதற்கு மேல் வேறு எதுவும் இல்லை.

குருச்சேவ் முன்வைத்த ''மூன்று சமாதானக் கோட்பாடுகள்'' என்ற திரிபுவாதக் கொள்கைகளை கோர்பசேவ் ரத்து செய்துவிடவில்லை. யுத்தம், சமாதானம், ஏகாதிபத்தியம் பற்றிய குருச்சேவ் திரிபுவாதக் கோட்பாடுகள் எதிலும் அவர் மாற்றம் செய்துவிடவில்லை. குருச்சேவ் முன்வைத்த அனைத்து மக்கள் அரசு,



அனைத்து மக்கள் கட்சி பற்றிய முடிவுகள் எதையும் கோர்பசேவ் மாற்றிவிடவில்லை. லாபத்துடன் இணைந்த உற்பத்தி, பொருளாதார ஊக்கம், உற்பத்தியுடன் இணைந்த ஊதியம் என்பது போன்ற குருச்சேவின் கொள்கைகளே கோர்பசேவின் கொள்கைகளாக இருக்கின்றன. குருச்சேவின் திரிபுவாதக் கொள்கைகள் அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொண்டு பின்பற்றுகிறவர்தான் கோர்பசேவ். அவர் செய்யும் சீர்திருத்தம் என்பதெல்லாம் உள்நாட்டில் குருச்சேவின் முதலாளித்துவக் கொள்கையால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியின் காரணமாக மேலும் முதலாளித்துவக் கொள்கையை விரிவு படுத்துவதன்றி வேறல்ல. கால் நூற்றாண்டில் நாட்டில் கம்யூனிசத்தை அமைக்கப் போவதாக திரிபுவாதத்தை அரங்கேற்றிய குருச்சேவ் 22-வது காங்கிரசில் அறிவித்தார். கால் நூற்றாண்டு கடந்துவிட்ட பின்பு அவருடைய வாரிசாக வந்திருக்கும் கோர்பசேவ் நாடு கடும் பொருளாதார நெருக்கடியிலும் தேக்கத்திலும் சிக்கியிருப்பதாக 27-வது காங்கிரசில் அறிவித்து குருச்சேவ் வழியிலேயே மிகத் தீவிரமான சீர்திருத்தங்களை மேற்கொண்டிருக்கிறார். முதலாளித்துவம் மேலும் முதலாளித்துவ உறவுகளையே உருவாக்கும் என்பது முதலாளித்துவத்தின் பொதுவிதியே.

சர்வதேச ரீதியில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் ஆயுதக் குறைப்பு ஒப்பந்த முயற்சியில் ஈடுபடுவதையும் ஆப்கானிஸ்தானத்திலிருந்து ராணுவத்தைத் திரும்பப் பெறுவதையும் (வியட்நாமிலிருந்து அமெரிக்கா வெளியேறியது, இந்தியாவிலிருந்து பிரிட்டன் வெளியேறியது போன்றதே இது.) சமாதானத்திற்கான ஆர்வம் என்பதாக இந்த முன்னாள் புரட்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்து திரிபுவாதிகளும் அழைக்கிறார்கள். ஆனால் ரசியாவின் இந்த நடவடிக்கைகள் உள்நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்கான ஒரு தற்காலிக நடவடிக்கையே. ஏகாதிபத்தியங்களுக்குள் இத்தகைய நடவடிக்கைகள் சாத்தியமே என்பதை லெனின் நீண்ட காலத்திற்கு முன்பே சுட்டிக்காட்டியிருக்கிறார். இதனால் ஏகாதிபத்தியங்களுக்குள் ஆயுதப் போட்டி மறைந்துவிட்டது என்றோ, ஏகாதிபத்தியங்கள் அவற்றின் பண்பை இழந்துவிட்டன என்றோ அர்த்தம் அல்ல. ஏகாதிபத்தியங்களுக்கிடையே ஏற்படும் இத்தகைய ஒப்பந்தங்களின் உண்மைத்

படிப்பகம்

www.padippkam.com



தன்மையை மக்களுக்கு அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக அவற்றை உலக அமைதிக்கான வழிமுறையாக காட்ட முயற்சிப்பது ஏகாதிபத்தியங்களைப் பற்றிய பொய்யான மாயையை ஏற்படுத்துவதே யாகும்.

மாவோவின் மறைவுக்குப்பின் அல்பேனியா மாவோவுக்கும் மாசேதுங் சிந்தனைக்கும் எதிராக மாறியதையும், சீனத்தில் அதிகாரத்தை டெங்சியாவோ பிங் கைப்பற்றியதையும் ரசியாவில் கோர்பசேவ் செய்துவரும் தீவிரமான சீர்திருத்தங்களையும் கண்டு நிலை தடுமாறிவிட்ட நமது முன்னாள் புரட்சியாளர்கள் ரசியா ஒரு சோசலிச நாடுதான் என்றும் , அதை சமூக ஏகாதிபத்தியம் என்று அழைத்து வந்தது தவறு என்றும் திடீரென்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ரசியாவில் முதலாளித்துவம் மீட்டமைக்கப்பட்டுவிட்ட தென்றால் அங்கே முதலாளி எங்கே இருக்கிறான்? என்று வழக்கமாக திரிபுவாதிகள் கேட்கும் அதே கேள்வியை நமது முன்னாள் புரட்சியாளர்கள் வேறொரு வகையில் கூறுகிறார்கள். ஒரு சமுதாயம் பொருளாதார அடித்தளத்தால் நிர்ணயிக்கப்படுகிறது என்றும் அவ்வாறு பார்த்தால் ரசியாவின் பொருளாதார அடித்தளம் பிரதானமாக சோசலிசப் பொருளாதார அடித்தளமாக இருப்பதால் அது சோசலிச நாடு என்றும் இவர்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு நாடும் அவற்றுக்கே உரிய சோசலிசக் கட்டுமான மாதிரிகளைக் கொண்டிருக்கும் என்றும் எனவே அதற்கு என்று பொதுவழி எதுவும் இல்லையென்றும், கோர்பசேவின் ரசியா, டெங்கின் சீனா உள்பட திரிபுவாதிகளின் தலைமையாதிக்கத்தில் இருக்கும் அத்தனை நாடுகளுமே சோசலிசநாடுகள்தான் என்றும் இவர்கள் கூறுகிறார்கள்.

இவ்வாறு கூறுவது சோசலிசத்தின் அரசியல் பொருளாதாரம் பற்றிய அரிச்சுவடிகூடத் தெரியாத பாமரத்தனமாகும்.

சோசலிசம் என்பது பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து தொடங்கி முழுநிறைக் கம்யூனிச சமுதாயம் அமையும்வரை உள்ள சமுதாய அமைப்பு ஆகும். சோசலிசப் பொருள் உற்பத்தி உறவு என்பது இடைவிடாது கம்யூனிசத்தை நோக்கி புரட்சிகர மாற்றத்திற்குள்ளாகிக் கொண்டிருப்பதாகும். இது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதன்



மூலம் சாதிக்கப்படுகிறது. எனவே சோசலிசப் பொருளாதார அடித்தளம் என்பதை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திலிருந்தும், அதன் கீழ் தொடரும் வர்க்கப் போராட்டத்திலிருந்தும் நீக்கிப் பார்க்க முடியாது. எனவே சோசலிசப் பொருளாதார அடித்தளம் என்பது புரட்சிகர மாற்றத்திற்குள்ளாகிக் கொண்டிருக்கும் பொருளாதார அடித்தளமாகும். இங்கு முதலாளித்துவத் தனியுடைமை இருக்கிறதா, கூட்டுடைமை இருக்கிறதா என்பதல்ல முதன்மையான கேள்வி, மாறாக, பாட்டாளி வர்க்க அரசால் முதலாளித்துவத்துக்கும், முதலாளித்துவப் பாதைக்கும் எதிரான போராட்டம் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறதா என்பதே முதன்மையான கேள்வியாகும். அத்தகைய போராட்டம் நடத்தப்படவில்லையெனில், அந்நாட்டின் பொருளாதார அடித்தளம் சோசலிசப் பொருளாதார அடித்தளமாக அல்ல, முதலாளித்துவப் பொருளாதார அடித்தளமாகவே இருக்கிறது என்று உறுதிபடக் கூறலாம்.

சுருங்கச் சொன்னால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்தும் நாடுகள் மட்டுமே — பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப்போராட்டத்தைப் பிரதானக் கண்ணியாகக் கொண்டு, அரசியலை ஆணையில் வைத்து சமுதாயத்தை வழிநடத்தும் நாடுகள் மட்டுமே சோசலிச நாடுகள் ஆகும்.

ஆனால் ரசியாவின் நிலைமை என்ன? பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், கட்சியையும், வர்க்கப் போராட்டத்தையும் பகிரங்கமாகக் கைவிட்டு கால் நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. சீனத்தின் நிலை என்ன? நான்கு நவீனமயமாக்கல் அவர்களுடைய தாரக மந்திரமென்றும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது, அரசியலை ஆணையில வைப்பது, வர்க்கப் போராட்டத்தைக் கேந்திரக் கண்ணியாகக் கொள்வது போன்ற கோட்பாடுகள் தவறானவை என்றும் அவர்கள் கூரைமேல் ஏறிநின்று பிரகடனப்படுத்திவிட்டார்கள். இந்நிலையில் இந்நாடுகளை சோசலிச நாடுகள் என்றும், இந்நாடுகளின் கட்சிகளை கம்யூனிஸ்ட் கட்சிகள் என்றும் கூறுவது பாட்டாளி வர்க்கத்தை ஏமாற்றுவதேயாகும்.

சோசலிசத்தில் சீன மாடல் என்றும், ரசிய மாடல் என்றும் நாட்டுக்கு ஒரு மாடல் பற்றி பேசுவது, எல்லா நாட்டுக்கும் பொதுவான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் அதன்கீழ் வர்க்கப்

படிப்பகம்

www.padippkam.com



போராட்டத்தையும் மறுத்து 'உற்பத்திச் சக்திகள்' பற்றிய முதலாளித்துவக் கோட்பாட்டை எல்லா நாடுகளுக்குமான பொது விதியாக்கி இருப்பதை மறைப்பதற்கன்றி வேறெதற்காகவும் அல்ல.

அடுத்து ரசியாவை சமூக ஏகாதிபத்தியம் என்று அழைப்பது தவறு என்று இவர்கள் கண்டு பிடித்திருப்பது வேடிக்கையானதாகும். ஏனெனில் அது புதிய கண்டு பிடிப்பல்ல. நீண்ட காலத்துக்கு முன்பே திரிபுவாதிகள் கண்டுபிடித்துக் கூறிய அதே துருப்பிடித்துப் போன காரணங்களையே இவர்கள் இவ்வளவு கால தாமதமாக தூக்கிக் கொண்டு வந்து கூரை மேல் நின்று கூவுகிறார்கள்.

ஏகாதிபத்தியம் என்றால் நிதி மூலதன ஆதிக்கம் என்றும், ரசியாவில் அது நிரூபிக்கப்படவில்லை ஆதலால் ரசியாவை ஒரு சமூக ஏகாதிபத்தியம் என்று கூறமுடியாது என்றும் நீண்டகாலத்திற்கு முன்பே திரிபுவாதிகள் கூறியதை இவர்கள் ஏதோ புதிதாகக் கூறுவது போல் கூறுகிறார்கள்.

'சொல்லில் சோசலிசம் செயலில் ஏகாதிபத்தியம்' என்று சமூக ஏகாதிபத்தியத்திற்கு விளக்கம் அளித்த லெனின் இரண்டாம் அகில சந்தர்ப்பவாதிகளை சமூக ஏகாதிபத்தியவாதிகள் என்று அழைத்தார். இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகள் சோசலிசம் பேசிக் கொண்டே உள்நாட்டுப் புரட்சி யுத்தத்தையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் எதிர்த்தனர். தமது சொந்த நாட்டு ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தையும் அதன் காலனி ஆதிக்கத்தையும் ஆதரித்தனர். அவர்களை சமூக ஏகாதிபத்தியவாதிகள் என்று லெனின் அடையாளம் காட்டினார். அப்போது அவர்களிடம் அதிகாரம் எதுவும் இல்லை. அவர்கள் சோசலிசம் பேசிக் கொண்டே புரட்சியைக் கைவிட்டு ஏகாதிபத்தியவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்தார்கள் என்பதாலேயே அவர்கள் சமூக ஏகாதிபத்தியவாதிகள் என்றார் லெனின். அவர்களிடம் நிதி மூலதன ஆதிக்கம் இருந்தது என்பதால் அல்ல. அந்த ஆராய்ச்சிக்கும் சமூக ஏகாதிபத்தியத்திற்கும் சம்பந்தமேதும் இல்லை. அவர்களின் வர்க்க அடிப்படை பற்றியும் அவர் கூறினார். பாட்டாளி வர்க்கத்துள் இருக்கும் சலுகை பெற்ற பிரிவினர், 'தொழிலாளி வர்க்கப் பிரபுகுலத்தோர்', உண்மையில் இவர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்துள் இருக்கும் 'முதலாளி வர்க்கத்தினர்', 'வர்க்க விரோதிகள்'. இவர்களிடம் இருந்து தீர்மானகரமாக முறித்துக் கொண்டு அவர்களுடைய சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்துவதால் மட்டுமே பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கம் வளர முடியும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.



குருச்சேவ் – கோர்பசேவ் திரிபுவாதிகள் ரசியாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் வர்க்கப் போராட்டத்தையும் கைவிட்டு விட்டார்கள் என்பதை அவர்களே பிரகடனப்படுத்தி இருக்கிறார்கள். 'பாராளுமன்றப் பாதை' பற்றிய போதனை மூலம் உலகம் முழுவதும் 'முதலாளித்துவக் கம்யூனிஸ்ட் கட்சி'களை அமைத்து எல்லா நாடுகளின் புரட்சியையும் காட்டிக் கொடுத்து அவற்றின் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுடன் கூட்டமைத்துக் கொண்டிருக்கிறார்கள். 'மூன்று சமாதானக் கொள்கை'கள் மூலம் தமது உலக மேலாதிக்கத்திற்கான முழுத் திட்டத்தையும் வகுத்து செயல்படுத்தி வருகிறார்கள். இவர்களுடைய வர்க்க அடிப்படை சுரண்டும் சலுகை பெற்ற பிரிவு என்றும், அது ரசியாவின் மிகப் பரந்துபட்ட மக்களுக்கு எதிரி என்றும், சமூக ஏகாதிபத்தியம் என்றும் மாவோ அம்பலப்படுத்தி இருக்கிறார்.

நமது முன்னாள் புரட்சியாளர்கள் ரசிய சமூக ஏகாதிபத்தியவாதிகளும் சீன முதலாளித்துவப் பாதையாளர்களும் ஒன்றுபட்டு சர்வதேச கம்யூனிச இயக்கத்தைப் பலப்படுத்தவேண்டும் என்று எல்லாத் திரிபுவாதிகளையும் போல தமது சொந்த முகாமின் ஒற்றுமை பற்றிக் கவலைப் படுகிறார்கள். ஆனால் இத்தகையவர்களிடமிருந்து முற்றாக முறித்துக் கொள்வதன் மூலம் மட்டுமே, அவர்களை முற்றாக அம்பலப்படுத்தி தூக்கியெறிவதன் மூலம் மட்டுமே சர்வதேச கம்யூனிச இயக்கத்தை ஒன்று படுத்தவும், பலப் படுத்தவும் முடியும் என்று லெனினியம் நமக்குப் போதிக்கிறது.

## 6

இன்றைய உலகின் மார்க்சியம் என்பது மார்க்சிய–லெனினிய-மாசேதுங் சிந்தனையாகும்.

மார்க்சியம் உலகைப் புரிந்து கொள்வதற்கு மட்டுமல்ல அதை மாற்றியமைப்பதற்கும் வழி காட்டும் தத்துவமாகும். பல்வேறு தத்துவப்

படிப்பகம்

www.padippkam.com



போக்குகளுக்கிடையே முதன்முதலாக உலகைப் புரிந்து கொள்ளவும், மாற்றியமைக்கவும் வழிகாட்டிய தத்துவம் மார்க்சியமே. மார்க்சியம் என்பது வறட்டுக் கோட்பாடல்ல. அது வளரும் விஞ்ஞானமாகும். உலகில் புதிய நிலைமைகள் தோன்றும்போது அதைப் புரிந்துகொள்ளவும், புரட்சிகரமாக மாற்றியமைக்கவும் அது வழிகாட்டுவதோடு அதுவும் வளர்ச்சியடைகிறது. உலகில் முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சியடைந்த ஒரு புதிய நிலை தோன்றியபோது அதை மார்க்சிய அடிப்படையில் விளக்கி புரட்சிக்கு வழிகாட்டியது லெனினியம். அப்போது மார்க்சியம், மார்க்சிய–லெனினியமாக் வளர்ச்சியடைந்தது. அறுபதாம் ஆண்டுகளிலிருந்து உலகில் சோசலிச நாடுகளில் முதலாளித்துவ மீட்சியும் அதற்கு எதிரான போராட்டமும் தொடங்கியிருக்கிறது. ரசியாவில் குருச்சேவ் புரட்டல்வாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றி முதலாளித்துவத்தை மீட்டமைத்து சமூக ஏகாதிபத்தியமாகச் சீரழித்திருக்கிறார்கள். இதை மார்க்சிய –லெனினிய அடிப்படையில் புரிந்து விளக்கி புரட்சிக்கு வழிகாட்டியது மாசேதுங் சிந்தனை. அப்போது மார்க்சிய – லெனினியம், மார்க்சிய – லெனினிய–மாசேதுங் சிந்தனையாக வளர்ச்சியடைந்தது.

மாசேதுங் சிந்தனை சோசலிச நாடுகளில் முதலாளித்துவப் பாதையாளர்களுக்கு எதிராகவும், முதலாளித்துவ மீட்சிக்கு எதிராகவும் பாட்டாளி வர்க்கத்தைத் தயார்படுத்துகிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதன் மூலம் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டமைக்க வழிகாட்டுகிறது.

மாசேதுங் சிந்தனை சோசலிசப் போர்வையில் வரும் ஏகாதிபத்தியத்தை – சமூக ஏகாதிபத்தியத்தை – உலக மக்களுக்கும், நாடுகளுக்கும் அடையாளம் காட்டுகிறது. அவற்றின் கபடத்தனமான சோசலிசம் மற்றும் சமாதான முழக்கங்களை அம்பலப்படுத்தி சகலநாட்டு மக்களின் புரட்சிப்பாதையையும் பாதுகாக்கிறது.

மாசேதுங் சிந்தனை இன்றைய உலகைப் புரிந்துகொள்வதற்கும், புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கான போராட்டத்தை நடத்துவதற்கும் பாட்டாளி வர்க்கத்துக்கு அவசியமான ஆயுதமாகும்.



எனவே இன்று பாட்டாளி வர்க்கம் மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை தனது தத்துவார்த்த ஆயுதமாக ஏந்திக் கொண்டிருக்கிறது.

திரிபுவாதம் என்பது முதலாளித்துவ சித்தாந்தம் என்று மாவோ சொன்னார். மாசேதுங் சிந்தனையை எதிர்ப்பதில் பல வண்ணத் திரிபுவாதிகளும் தத்தமக்கு உரிய முறையில் செயல்படுகிறார்கள்.

கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களுக்கு எதிராக, வர்க்க எதிரிகளும், ஏகாதிபத்தியவாதிகளும் பயன்படுத்தும் அதே இழிமொழிகளையும் பழிமொழிகளையும் தோழர் மாவோவுக்கு எதிராகப் பயன் படுத்துவதன் மூலம் மாசேதுங் சிந்தனையை மறுத்துவிட முயல்கிறார்கள் மாஸ்கோ சமூக ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் அடிவருடிகளாக உலகம் முழுவதும் இருக்கும் சி.பி.ஐ. போன்ற முதலாளித்துவக் கம்யூனிஸ்டுகளும்.

மற்றொரு பிரிவினர் இருக்கிறார்கள். சி.பி.எம்., எஸ்.யூ.சி.ஐ., எம்.சி.பி.ஐ. வகையறாக்கள் இவர்கள். மாசேதுங்கை மாபெரும் பாட்டாளி வர்க்கத் தலைவர்களில் ஒருவர் என்று புகழ்பாடி அதே நேரத்தில் மாசேதுங் சிந்தனை என்ற பாட்டாளி வர்க்க தத்துவ ஆயுதத்தை தூக்கியெறிந்து விடுவதை இவர்கள் தந்திரமாகக் கொண்டிருக்கிறார்கள்.சீனத்தின் டெங், இந்தியாவின் வி.மி. போன்ற மற்றொரு பிரிவினர் இருக்கிறார்கள். லெனினியத்தை தூக்கியெறிந்து விட்டு லெனினியத்தையே பின்பற்றுவதாகக் குருச்சேவ் - கோர்பசேவ் கும்பல் கூறுவது போல் இவர்கள் மாசேதுங் சிந்தனையை உண்மையில் தூக்கியெறிந்துவிட்டு அதைப் பின்பற்றுவதாகக் கபடத்தனமாக அறிவிக்கிறார்கள்.

இவர்களை எல்லாம் தவிர்த்து மற்றொரு பிரிவினர் மார்க்சிய–லெனினியப் புரட்சியாளர்களிடையே இருக்கிறார்கள். மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை உணர்வுப்பூர்வமாக உயர்த்திப்பிடிக்க விரும்பும் இவர்கள் உண்மையில் மாசேதுங் சிந்தனையைக் கிரகித்துக்கொள்ளாமல் சீனப்புரட்சிப் பாதையும், கலாச்சாரப் புரட்சி நடவடிக்கைகளுமே மாசேதுங் சிந்தனை என்பதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஏன், புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டம், நீண்டகால மக்கள் யுத்தம், அரைக்காலனி என்பன

படிப்பகம்

www.padippkam.com



போன்றவற்றைக் கூறுவதே மாசேதுங் சிந்தனை என்பதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். நக்சல்பாரி விவசாயிகளின் பேரெழுச்சிக்குப்பின் கட்சியை கட்டும் முயற்சியில் தத்துவார்த்தப் போராட்டத்தின் முக்கியத்துவத்தைப் புறக்கணித்ததன் எச்சங்களே இவை. இவை கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் சித்தாந்த ஒற்றுமைக்குத் தடையாக இருப்பதுடன் திரிபுவாதத்துக்குப் பலியாகும் அபாயம் கொண்டதும் ஆகும்.

மார்க்சிய-லெனினிய - மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடித்து சகல வண்ணத் திரிபுவாதத்துக்கும் எதிராக தீர்க்கமான போராட்டத்தை நடத்துவதன் மூலம் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களிடையே சித்தாந்த ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவேண்டும். தேசிய, சர்வதேசிய அளவில் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களை ஐக்கியப்படுத்த வேண்டும். இது இன்றுள்ள மிக முக்கியமான கடமையாகும்.

'மாபெரும் விவாதமும்' பிற தத்துவார்த்த ஆவணங்களும் வெளியிடப்படுவது இதற்கு உதவும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

***வெல்க மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனை !***

படிப்பகம்